Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., | ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 101 | புதன்கிழமை Wednesday | 11.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# பெண்களுக்கு அறிவு தான் உண்மையான அழகு படிப்பு தான் அணிகலன்

## மாணவிகள் மத்தியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



பெண்களுக்கு அறிவு தான் உண்மையான அழகு. படிப்பு தான் உண்மையான அணிகலன் என மாணவிகள் மத்தியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள கிறிஸ்தவ கல்லூரியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு விழா இன்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசிய மு.க.ஸ்டாலின், கிறிஸ்தவ நிறுவனத்தினர் என்னைப் பார்க்க வரும் போது கோரிக்கையுடன் தான் வருவார்கள். அதனை உடனே நிறைவேற்ற, பல சட்டச் சிக்கல்கள் இருக்கும். கூடுதலாகநிதிதேவைப்படும். புது அரசாணை வெளியிட வேண்டியிருக்கும். இருந்தாலும், எங்களது கடமையை முடிந்த வரை செய்து வருகிறோம். கண்டிப்பாக மீதமுள்ள கோரிக்கைளையும் நிறைவேற்றித் தருவோம்.

நானும் MCC பள்ளியின் முன்னாள் மாணவர் தான். அந்த முன்னாள் மாணவர் தான் இன்று WCC-க்கு வந்திருக்கிறேன். இத்தனை மாணவிகளை ஒரே இடத்தில் பார்க்கும் போது, உங்களுக்காகப் பார்த்து பார்த்து செயல்படுத்தும் திட்டங்கள் தான் நினைவுக்கு வருகிறது. குறிப்பாக, புதுமைப்பெண் திட்டத்தால் நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் மாணவிகள் தான் அதிகம் பயனடைந்துள்ளனர். கல்லூரியில் சேரும் பெண்களின் எண்ணிக்கை 34% உயர்ந்துள்ளது. இதை விட எனக்கு என்ன மகிழ்ச்சி வேண்டும். இது சாதரண சாதனை அல்ல.

கடந்த 5 ஆண்டுகளில் பல குடும்பங்களின் தலையெழுத்தே மாறியுள்ளது. மேலும், அரசுப் பள்ளிகளிலிருந்து தேர்வான ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. திட்டங்கள் ஏற்படுத்திய தாக்கத்தை புரிய வைப்பது மட்டும் இல்லாமல், அதைத் தாண்டி உங்களுக்கு ஒரு பாடம் இருக்கிறது. வெற்றிக்கு Shortcut கிடையாது. Hard work செய்தால் தான் ஜெயிக்க முடியும். இந்த இடத்தில், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் டயலாக் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். 'கஷ்டப்படாமல் எதுவுமே கிடைக்காது. கஷ்டப்படாமல் கிடைக்கிறது எதுவும் நிலைக்காது'

எந்த சாதனையாளர்களை எடுத்துக் கொண்டாலும், அவர்களுக்கு மிகப் பெரிய Journey இருக்கும். அந்த பயணத்திலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ளும் பாடம் தான் உங்களை பக்குவப்படுத்தும். பக்குவத்துடன் அடையும் வெற்றி தான் நிலைத்து நிற்கும். படிப்பில் பிடிமானம் இல்லாத போது உங்களின் அப்பா, அம்மாவை நினைத்துப் பாருங்கள். வெளிநாடுகளில் குறிப்பிட்ட வயதிற்குற்கு மேல் இளைஞர்கள் அவர்களே தங்களின் வாழ்க்கையைப் பார்த்துக் கொள்வது தான் கலாச்சாரம்.

ஆனால் நம் ஊரில் குழந்தைகளின் கல்விக்காக பல பெற்றோர்கள் தங்கள் உடல், பொருள், உழைப்பு மட்டுமின்றி, வாழ்நாள் சேமிப்பையும் செலவு செய்கிறார்கள். அப்படிப்பட்ட பெற்றோர்கள் இருக்கும் நாடு தான் தமிழ்நாடு. பெற்றோர் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை காப்பாற்றுங்கள். அவர்களுக்கு பெருமையை வாங்கிக் கொடுங்கள்.

அதை விட பெரிய சந்தோஷம் இருக்க முடியாது.

என்னைப் பொறுத்தவரை பெண்கள் என்றாலே அழகு தான். அப்படிப்பட்ட பெண்களுக்கு அறிவு தான் உண்மையான அழகு. படிப்பு தான் ஒரு பெண்ணிற்கு உண்மையான அணிகலன். போட்டி நிறைந்த இந்த உலகில் நிலைத்து நிற்க, ஒரு டிகிரி படித்தால் போதாது. வேலைக்கே போனாலும் உங்களுக்கு ஆர்வம் இருக்கக் கூடிய துறையில், ஆராய்ச்சி படிப்பு வரை தொடர்ந்து படிக்க வேண்டும்.

உங்கள் முன்னேற்றத்திற்காக மட்டுமல்ல, தமிழ்நாடும் முன்னேற வேண்டும் என்பதற்காக.

இன்றைக்கு தமிழ்நாடு நம்பர் ஒன் மாநிலமாக இருக்கிறது. ஆனால், வரலாற்றை புரட்டிப் பார்த்தால் 1950 ஆண்டுகளில் தலைகீழாக தான் இருக்கிறது. நாட்டிலேயே வறுமையில் நம்பர் 1 ஆக இருந்த தமிழ்நாடு இப்போது நாட்டிலேயே வறுமைக் குறைந்த மாநிலமாக வளர்ந்துள்ளது. இன்னும் பெருமையாகக் கூறுவேன், நாட்டிலேயே 2-வது பெரிய எக்கானாமியாக உருவெடுத்துள்ளோம்.

கடந்த 6 மாதங்களில் வின்பாஸ்ட், டாடா கார் உற்பத்தி தொழிற்சாலையை குறைந்த காலத்தில் திறந்து வைத்துள்ளோம். இதற்கு முன்னர் குறைந்த காலத்தில் 2 கார் தொழிற்சாலைகளை திறந்து வைத்த வரலாறு கிடையாது. ஆனால், நாம் அதையும் செய்துள்ளோம். அடுத்து பாரேடு கம்பெனியும் உற்பத்தியை தொடங்கவுள்ளனர்.

அடுத்த மாநிலங்களுடன் என்பதை தாண்டி, உலக நாடுகளுடன் தான் போட்டி போடுகிறோம். இதற்கு காரணம் தமிழ்நாடு கல்வியில் கவனம் செலுத்தியதுதான்.

பெண் முன்னேறினால் ஒரு தலைமுறையே முன்னேறும். நீங்கள் படித்து நல்ல வேலைக்கு சென்றால், ஒரு தலைமுறையே முன்னேறும். நாட்டிலேயே பெண்கள் தொழிற்சாலையில் அதிகம் பணிபுரியும் மாநிலமாக, எட்டி பிடிக்க முடியாத அளவுக்கு தமிழ்நாடு வளர வேண்டும். உங்கள் வளர்ச்சியில் நான் உறுதுணையாக இருப்பேன். மேலும், 14 வயது பெண் குழந்தைகளுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி திட்டத்தை தொடங்கியுள்ளோம். இது இந்தியாவில் வேறு எங்கும் கிடையாது. இது குறித்து உங்களுக்கு தெரிந்தவர்களிடம் எடுத்து சொல்லுங்கள். இவ்வளவு நேரம் பேசியதை அறிவுரையாக எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்களும் எனக்கு மகள்கள் போலத் தான்" என உரையாற்றினார்.

# ஏப்ரல் 2வது வாரத்தில் தமிழக சட்டசபை தேர்தல்; தேர்தல் ஆணையம் திட்டம்



தமிழகத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. தி.மு.க. அரசின் பதவிக்காலம் மே 10-ஆம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே, ஏப்ரல்-மே மாதங்களில் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் ஆணையம் 5 மாநிலங்களில் (தமிழகம், புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்கம், அசாம்) தேர்தலை பல கட்டங்களாக நடத்த திட்டமிட்டுள்ளது. டெல்லி தகவல்களின்படி, தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளது. குறிப்பாக ஏப்ரல் 2-வது வாரத்தில், ஏப்ரல் 13 அன்று வாக்குப்பதிவு நடைபெறும் என கூறப்படுகிறது. தேர்தல் தேதி இம்மாத இறுதியிலோ அல்லது மார்ச் தொடக்கத்திலோ அறிவிக்கப்படலாம்.

தற்போது வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. சிறப்பு தீவிர திருத்தத்தில் (SIR) சுமார் 97 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டன. இறந்தவர்கள், இரட்டை பதிவாளர்களைத் தவிர்த்து, முகவரி மாறியவர்களுக்கு ஆதாரத்துடன் மீண்டும் சேர்க்க அவகாசம் வழங்கப்பட்டது. அந்த அவகாசம் முடிந்தது. சுமார் 20 லட்சம் பேர் மீண்டும் விண்ணப்பித்துள்ளனர்.

இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப்ரவரி 17-ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது. இதில் இடம்பெறுபவர்களே தேர்தலில் வாக்களிக்க தகுதியுடையவர்கள். நாளை (புதன்கிழமை) துணைத் தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் எத்துரு சென்னை வருகிறார். தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகளை சந்தித்து வாக்குச்சாவடி, வாக்காளர் எண்ணிக்கை குறித்து ஆய்வு செய்ய உள்ளார்.

இந்த பார்வையீடு தேர்தல் ஏற்பாடுகளை வலுப்படுத்தும். தேர்தல் ஆணையம் முழு குழு விரைவில் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் தேர்தல் அறிவிப்பு விரைவில் வரும் என்பதால், அரசியல் கட்சிகள் தீவிரமாக தயாராகி வருகின்றன. DMK, AIADMK, BJP, TVK உள்ளிட்ட கட்சிகள் தீவிர பிரச்சாரத்துக்கு தயாராகி வருகின்றன. வாக்காளர்கள் இறுதி பட்டியலை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இந்த தேர்தல் தமிழக அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தமிழகத்தைச் சேர்ந்த 6 மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவி காலம் ஏப்ரல் 2-ந் தேதியுடன் முடிவடைகிறது. திமுகவின் திருச்சி சிவா, என். ஆர். இளங்கோ, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி என்விஎன் சோமு, அதிமுக தம்பிதுரை, தமாகா ஜிகே வாசன் ஆகியோரது பதவி முடிவடைகிறது.

இதனையடுத்து 6 ராஜ்யசபா எம்.பி. இடங்களுக்கு அடுத்த மாதம் தேர்தல் நடத்தப்படும். தமிழக சட்டப்பேரவை தேர்தல் பிரசாரம் களைகட்டும் நிலையில் மாநிலங்களவை தேர்தலும் நடைபெற இருக்கிறது. சட்டப்பேரவை தேர்தலுக்கான கூட்டணிப் பேச்சுவார்த்தைகளிலும் ராஜ்யசபா சீட்டை உறுதி செய்வதில் கட்சிகள் கவனம் செலுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

# வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து வாக்குகளை பெற்றுவிடலாம் என திமுகவினர் நினைக்கின்றனர் என அன்புமணி ராமதாஸ் விமர்சனம்



வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து வாக்குகளை பெற்றுவிடலாம் என திமுகவினர் நினைக்கின்றனர் என அன்புமணி ராமதாஸ் விமர்சனம் செய்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சி (அன்புமணி) சார்பில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள ஒய்எம்சிஏ மைதானத்தில் மாநில இளைஞரணி பொதுக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் அன்புமணி ராமதாஸ் தலைமையில் பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த பொதுக் குழுவில் அன்புமணி ராமதாஸ் பேசுகையில், "இளைஞர்களை நம்பி தான் பாமக உள்ளது. வரும் சட்டமன்ற தேர்தலில் அர்ப்பணிப்போடு நீங்கள் பணியாற்ற வேண்டும். நமது கட்சியில் நடைபெறும் குழப்பத்திற்கு ஆளும் திமுக தான் காரணம். தேர்தலில் திமுக பணத்தை மட்டுமே நம்பியுள்ளது.

தீய சக்தி திமுகவை பற்றி களத்தில் நமது இளைஞர்கள் மக்களிடம் வீதி வீதியாக, வீடு வீடாக சென்று சொல்லுங்கள். திமுக ஒற்றை இலக்க எண்ணிலேயே தேர்தலில் வெற்றி பெறும். திமுக மீது பெற்றோர்கள், பெண்கள் மிகுந்த கோபத்துடன் உள்ளனர். தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து போராட்டங்களுக்கும் முதலமைச்சரே காரணம்.

மருத்துவர் அய்யாவை சுற்றி சில துரோகிகள் உள்ளனர். சின்னம் தொடர்பாக, கட்சியின் அங்கீகாரம் தொடர்பாக பொய்யான தகவல்களை சொல்லி அய்யாவை குழப்பியுள்ளனர். இதில் முக்கியமான துரோகி ஜி.கே. மணி. இந்த கூட்டத்தில் ஜி.கே. மணியை பற்றி பேசுவதற்கு தகுதி கிடையாது. நமக்குள்ளே விமர்சனம் செய்து யாரும் நேரத்தை வீணடிக்க வேண்டாம். நமக்கு ஒரே எதிரி கொடுங்கோல் திமுக தான். திமுகவின் சூழ்ச்சியாலேயே நமக்குள் குழப்பம் ஏற்படுகிறது. திமுகவினர் இங்கேயும், அங்கேயும் கொளுத்தி போடுவதில் பிஎச்டி முடித்துள்ளனர். திமுக தேர்தல் களத்தில் இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கி உள்ளனர். இவ்வளவு மோசமான ஆட்சியை தமிழ்நாடு பார்த்தது இல்லை. 47 தொகுதிகளில் பணம் கொடுக்கவே அமைச்சர் எ.வ.வேலுவுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. காசை கொடுத்து ஓட்டு வாங்கிவிடலாம் என்று திமுகவினர் நினைக்கின்றனர்" என தெரிவித்தார்.

கூட்டத்தில், எல்லோருக்கும் தரமான, சமச்சீரான, கட்டணமில்லா, சுமையில்லா திறன்சார் கல்வி, அறிவுசார் கல்வி, தொழில் கல்வி கட்டாயமாக வழங்கப்படுவதை உறுதி செய்ய பாடுபடுவோம். ஒரு பைசா ஊழல் இல்லாத நேர்மையான, தூய்மையான ஆட்சி அமைக்க உறுதியேற்போம். ஓட்டுக்குப் பணம் கொடுக்கும் கலாச்சாரத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடம் பரப்புரை செய்வோம் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சற்றே குறைந்த தங்கம் மற்றும் வெள்ளி விலை



சென்னையில் (பிப். 10) ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.560 குறைந்து விற்பனை செய்யப்படுகிறது.

சென்னையில் கடந்த சில மாதங்களாக தங்கத்தின் விலை அசுர வேகத்தில் உயர்ந்து வருகிறது. இதுவரை நாள்தோறும் நூறுகளில் உயர்ந்து வந்த விலை, அண்மைக் காலமாக ஆயிரங்களில் உயர்ந்து வருகிறது. அந்த வகையில், சனிக்கிழமை தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,360 உயர்ந்து ரூ.1,15,360-க்கு விற்பனையான நிலையில், திங்கள்கிழமை கிராமுக்கு ரூ.230 உயர்ந்து ரூ.14,650-க்கும், சவரனுக்கு ரூ.1,840 உயர்ந்து ரூ.1,17,200-க்கும் விற்பனையானது. இந்த நிலையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.560 குறைந்து ஒரு சவரன் ரூ. 1,16,640-க்கும் கிராமுக்கு ரூ.70 குறைந்து ஒரு கிராம் ரூ. 14,580-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஆயிரங்களில் உயர்ந்து வந்த தங்கத்தின் விலையானது, சற்று நிம்மதி பெருமூச்சு விடும் வகையில் சற்று குறைந்துள்ளது.

தங்கத்தை போலவே வெள்ளி விலையும் தொடர்ந்து உயர்ந்து வந்த நிலையில், வெள்ளி விலையில் இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.300-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.3 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.

# திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது

## கோயில் அறங்காவலர் குழு தலைமையில் வயதான தம்பத்தினருக்கு சிறப்பு செய்யப்பட்டது

தனியார் தொலைக்காட்சி தொகுப்பாளனி மற்றும்திரைப்படநடிகை ளுக்கு மரியாதை செய்யும் நிகழ்ச்சி திருப்பரங்குன்றம் சுப்பி- மரியாதை செலுத்தி அவர்களிடம் விழுந்து வணங்கி ஆசி பெற்றனர்.



அர்ச்சனா அவரது மகள் மற்றும் குடும்பத்தினருடன் முருகனின் முதல் படை வீட்டில் சாமி தரிசனம் மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி திருக்கோவில் சார்பில் 70 வயது பூர்த்தி அடைந்த 25 மூத்த தம்பதியர்களுக்கு திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் சிறப்பு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழக முதல்வர் சட்டப்பேரவையில் அறிவித்ததன்பேரில் 70வயது பூர்த்தி அடைந்தவர்கரமணிய சுவாமி கோவிலில் இன்று நடைபெற்றது. மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த 25 தம்பதியினருக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது தொடர்ந்து அவர்களுக்கு பூஜை பொருட்கள் சுவாமி படம் உள்ளிட்டவைகள் வழங்கி மாலை மாற்றும் வைபவம் நடைபெற்றது. முதல் தாணிக்கப்பட்டர் சுவாமிநாதன் பூஜைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். அறங்காவலர் குழு தலைவர் சத்யபிரியா பாலாஜி மற்றும் சண்முகம் அறங்காவலர்கள் பங்கேற்று வயதான தம்பதியினருக்கு நிகழ்வின் முடிவில் தனது குடும்பத்துடன் சாமி தரிசனம் செய்ய வந்த அர்ச்சனாவுக்கும் கோவில் நிர்வாகம் சார்பில் மரியாதை அளிக்கப்பட்டது.

தனியார் தொலைக்காட்சி தொகுப்பாளினி அர்ச்சனா தனது மகள் சாரா வினித் மற்றும் குடும்பத்தினருடன் இன்றுதிருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் சாமி தரிசனம் மேற்கொண்டார். அவரிடம் கோயிலுக்கு வந்து இருந்த பக்தர்கள் சிலர் புகைப்படம் எடுக்க முற்பட்டனர் கோவில் என்பதால் வேண்டாம் என்று கூறிவிட்டு சென்றார்.



அமைச்சர்.பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட யா.ஒத்தக்கடை நரசிங்கம் ஊராட்சியில் உள்ள அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாளில் பள்ளி மாணவிகளுக்கு ஆல்பெண்டசோல் மாத்திரைகளை வழங்கினார்

# கீழக்கோட்டையில் தேசிய குடற்புழு நீக்கநாளில் அல்பெண்டசோல் மாத்திரை வழங்குதல் நிகழ்ச்சி




சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாளில் மாணவ மாணவிகளுக்கு அல்பென்டசோல் மாத்திரைகள் வழங்கப்பட்டன. பள்ளியின் தலைமை ஆசிரியர் தெய்வானை தலைமை வகித்தார். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா வரவேற்புரையாற்றினார். பள்ளியின் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி 1முதல் 19 வயதுள்ளோர் ஆறு மாதத்திற்கொருமுறை அல்பென்டசோல் மாத்திரை உட்கொள்ள வேண்டும் என்றும் வாரந்தோறும் வியாழக்கிழமை இரும்புச் சத்து மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பள்ளி மாணவ மாணவிகள் அனைவருக்கும் தலைமை ஆசிரியை தெய்வானை மாத்திரைகளை உட்கொள்ள வழங்கினார். குடற்புழு தொற்றை நீக்குவோம். ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவோம் என மாணவ மாணவிகள் முழக்கமிட்டனர். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். ஆசிரியர்கள் கமலம்பாய் வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா பள்ளி மேலாண்மை குழு செயற்குழு உறுப்பினர்கள் சத்துணவு உதவியாளர்கள் அஞ்சலை கஸ்தூரி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பண்ருட்டி அருகே சுந்தரபாண்டி பகுதியில் செங்கல் சூளையில் மண் சரிந்து பெண் தொழிலாளி உயிரிழப்பு

கடலூர்:

பண்ருட்டி அருகே சுந்தரபாண்டி பகுதியில் செங்கல் சூளையில் மண் சரிந்து பெண் தொழிலாளி சாந்தி(45) உயிரிழந்தார். செங்கல் சூளையில் சட்டவிரோதமாக அளவுக்கு அதிகமாக பள்ளம் தோண்டி மண் எடுத்ததால் மண் சரிந்து சாந்தி உயிரிழந்தார். சாந்தி, நேற்று மாலை செங்கல் அறுக்க தோண்டப்பட்ட 10 அடி ஆழ பள்ளத்தில் நின்றுகொண்டு, மண்தோண்டினார். அப்போது சாந்தி மீது மண் சரிந்து மூடியது. இதை பார்த்து அதிர்ச்சி அடைந்து சத்தம் போட்டனர்.

உடனடியாக ஜே.சி.பி., மூலம் சரிந்திருந்த மண்ணை அகற்றினர். மண்ணுக்குஅடியில்சாந்தி இறந்தநிலையில்கிடந்தார். செங்கல் சூளை உரிமையாளர் வேணுநாதன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சாந்தியின் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். சூளை உரிமையாளரை கைது செய்ய வேண்டும், இறந்த சாந்தியின் குடும்பத்தினருக்கு ரூ. 25 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தினர். போலீசார் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை தொடர்ந்து மறியலை கைவிட்டனர். இதனை தொடர்ந்து செங்கல்சூளை உரிமையாளர் வேணுநாதன் மீது வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.





# தூய்மை பணியாளர்களுக்கு உணவு திட்ட விரிவாகத்தை மானாமதுரை எம்.எல்.ஏ. தமிழரசி ரவிக்குமார் தொடங்கி வைத்தார்

மாண்புமிகுதமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், போளிவாக்கத்தில் 9ஆம் தேதி நடைபெற்ற அரசு விழாவில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுத்திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இளையான்குடி பேரூராட்சி மற்றும் மானாமதுரை நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு இத்திட்டத்தினை விரிவாக்கம் செய்து மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் உணவுகள் வழங்கி சிறப்பித்தார்.

இதில் நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, நகர்மன்ற துணைத் தலைவர் பாலசுந்தரம், ஆணையாளர் கோபாலகிருஷ்ணன், பொறியாளர் பட்டுராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இந்நிகழ்வில் இளையான்குடி பேரூராட்சி தலைவர் நஜ்முதீன், துப்புரவு ஆய்வாளர் பாலமுருகன், நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் திமுக கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நல்லூரில் நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் மருத்துவ முகாம்

கடலூர் மாவட்டம் நல்லூர் ஸ்ரீ பாலாஜி மேல்நிலைப்பள்ளியில் ரும் நல்லூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளருமான பாவாடை மில் பொது மருத்துவம், ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் பரிசோதனை,



தமிழ்நாடு அரசின் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் மாபெரும் மருத்துவ முகாம் நேற்று செவ்வாய்க்கிழமை (10.02.2026) நடைபெற்றது.

நல்லூர்வட்டாரமருத்துவ அலுவலர் மருத்துவர் தமிழரசன் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமிற்கு, வேப்பூர் வருவாய் வட்டாட்சியர் செந்தில்வேல் முன்னிலை வகித்தார். விருத்தாச்சலம் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர்.ஆர்.ராதாகிருஷ்ணன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினகோவிந்தசாமி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டு, குத்துவிளக்கு ஏற்றி முகாமைத் தொடங்கி வைத்தனர்.

தொடர்ந்து, முகாமில் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் மருத்துவச் சேவைகள் மற்றும் சிகிச்சை முறைகளைச் சிறப்பு அழைப்பாளர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு, பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இம்முகாமகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம், கண் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் சிறப்பு மருத்துவர்களால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், விருத்தாச்சலம் ரோட்டரி சங்கத் தலைவரும், ஸ்ரீ பாலாஜி மேல்நிலைப் பள்ளியின் தாளாளருமான அன்புக்குமரன், சாய் அப்போலோ நர்சிங் கல்லூரி நிறுவனர் டாக்டர் தங்கதுரை மற்றும் அரசு மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப்பணியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

### தேனி மாவட்டம் பெரியகுளம் ஜாமிஆ அல் அஷரத்துல் முபஷ் ஷரா இறையியல் கல்லூரியில்

# முழு குர்ஆனையும் மனனமாக ஓதும் சிறப்பு நிகழ்ச்சி

தேனி மாவட்டம் பெரியகுளம் ஜாமிஆ அல் அஷரத்துல் முபஷ் ஷரா இறையியல் கல்லூரியில் ஒரே நபர், ஒரே நாளில் முழு குர்ஆனையும் மனப்பாடமாக ஓதும் நிகழ்ச்சிநடைபெற்றது. ஜாமிஆ வின் மாணவன் சித்தியன்கோட்டை பகுதியைச் சார்ந்த ஹாஃபிழ் முக்ஸித் மீரான் முழு குர்ஆனையும் மனனமாக ஓதினார். ஜே ஏ எம்



இறையியல் கல்லூரி தலைவர் அபுதாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், உத்தமபாளையம் பெரிய பள்ளிவாசல் தலைவர் தர்வேஷ் முஹ்யித்தீன், தேனி மாவட்ட முஸ்லிம் மேம்பாட்டு கூட்டமைப்பு பொதுச்செயலாளர் பொன்ராஜ் கொந்தாளம், ஜே.ஏ.எம். இறையியல் கல்லூரி பொருளாளர் அஜுஜுர் ரஹ்மான், முன்னாள் தலைமை இமாம் முஹம்மது அலி, தமிழ்நாடு மாநில ஜமா அத்துல் உலமா சபை துணைத்தலைவர் அலாவுத்தீன், மாநில லாரி உரிமையாளர்கள் சங்கம் துணைத் தலைவர் நிஜாத் ரகுமான், தேனி மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை துணைத் தலைவர் ஆலிம் அஹமது முஸ்தபா, வட்டார ஜமாஅத்துல் உலமா சபை செயலாளர் அஹ்மது பௌஜீத்தீன், உட்பட பலர் முன்னிலை வகித்தனர். ஜே ஏ எம் இறையியல் கல்லூரி நிறுவனர் மற்றும் முதல்வர் முகமது உசேன் மன்பஈ வரவேற்புரையாற்றினார். மக்கா பள்ளிவாசல் தலைவர் அப்துல் ரகுமான் துவக்க உரையாற்றினார். முஹம்மது மீரான், மீரா மைதீன், முகமது அலி ஜின்னா, முகமது இத்ரிஸ், உபயத்துல்லாஹ், பீர் முஹம்மது, பக்ருத்தீன் பாக்கர் முஹம்மது அப்துல் காசிம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். ஐக்கிய சமாதான பேரவை பொதுச் செயலாளர் ஏ எம் இறையியல் கல்லூரி நிர்வாகி முஜிபுர் ரஹ்மான் மற்றும் பேராசிரியர் அமீர் தங்கள் சிறப்புரையாற்றினர். துணை முதல்வர் அப்துல் அஹத் நன்றி உரையாற்றினார். மதராஸாவில் பேராசிரிய ர்கள் இறையியல் கல்லூரி நிர்வாகிகள் முபஷ்ஷரா உலமா பேரவையினர் உட்பட பலர் கலந்து கொண்ட னர்.



இம்முறை இந்தியா t20 உலக கோப்பையை உறுதியாக வரலாற்று சாதனையுடன் வெல்லும் .அதை முன்கூட்டியே கணித்து சொல்கிறேன்.அதனால் அந்த உலகக் கோப்பையில் நமது தேசிய கொடி நிறத்தை வரைந்துள்ளேன் .இப்படை தோற்கின் எப்படை வெல்லும்..வெல்க இந்தியா

# தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் குடற்புழு நீக்க மாத்திரை மாணவர்களுக்கு வழங்கப்பட்டது

வீட்டிற்கு வந்த உடன் கை ,கால்களை நன்றாக கழுவி கொள்ளுங்கள் இனிப்புகள் உண்ணுவதை குறைத்தால் குடற்புழு பாதிப்பை குறைக்கலாம் - செவிலியர் அறிவுரை. தேவகோட்டை- சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு சுகாதாரத்துறை சார்பில் குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

பள்ளி தலைமை ஆசிரியர்லெ.சொக்கலிங்கம் தலைமையில் சுகாதாரத்துறை சார்பில் பள்ளி மாணவர்களுக்கு ரத்த சோகை ஏற்படுவதை தவிர்க்க குடற்புழு நீக்கத்திற்கான 'அல்பென்டசோல்' மாத்திரைகளை தேவகோட்டை நகராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர்கள் மேரி, ஆரோக்கிய செல்வி ஆகியோர் மாணவர்களுக்கு வழங்கி பேசுகையில், மாணவர்கள் இனிப்பு சாப்பிடுவதை குறைத்து கொள்ள வேண்டும்.கீரை மற்றும் காய்கறிகளை அதிக அளவில் சாப்பிட்டால் குடற்புழு முற்றிலும் அழிந்துவிடும். சாப்பிடுவதற்கு முன்பும்,விளையாடிவிட்டு விட்டு வந்தபின்பும் அவசியம் கை ,முகம்,கால் கழுவி கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும்போது குடற்புழு முட்டைகள் வையிற்றுக்குள் செல்வதை அறவே தடுக்க முடியும். நோயிலிருந்து பாதுகாத்து கொள்ள இயலும் என்று பேசினார்கள்.

5 முதல் 13 வயது வரை உள்ள மாணவ,மாணவியர்க்கு




400 மி.கி., மாத்திரை வழங்கபட்டது.ரத்த சோகை நோயால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக இந்த மாத்திரைகள் வழங்கப்படுகிறது. பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

# உளுந்தூர்பேட்டை நகராட்சியில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் காலை உணவு திட்ட தொடக்க விழா

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை நகராட்சியில் சுமார் 150-க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர் அதிகாலை முதல் நள்ளிரவு வரை மாறி மாறி பணியாற்றி பெரும் தூய்மை பணியாளர்கள் பயன்பெறும் வகையில் தமிழக அரசின் சார்பில் காலை உணவு திட்டம் அறிவிக்கப்பட்டது இன்று திட்டத்தின் தொடக்க விழா நடைபெற்றது உளுந்தூர்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற விழாவில் உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மணிகண்டன் கலந்து கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு உணவுகள் வழங்கி தூய்மை பணியாளர்களுடன் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டார் 3 இட்லி ஒரு பொங்கல் என காலை உணவு வழங்கப்பட்டது விழாவில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் அதிகாலையிலேயே தூய்மை பணியாளர்கள் தங்களது பணியை தொடங்கி இரவு வரை கடுமையாக பணியாற்றி உளுந்தூர்பேட்டை நகராட்சி பகுதியை சுத்தமாகவும் தூய்மையாகவும் வைத்துள்ளனர் இதனால் காலை நேரத்தில் அவர்களால் நேரத்திற்கு உணவருந்த முடியாத நிலை இருந்து வந்ததால் அவர்களின் காலை உணவு பசியை போக்க தமிழக அரசு காலை உணவு திட்டம் அறிவித்துள்ளது காலை உணவு சாப்பிடவில்லை என்றால் உடல் ரீதியான பாதிப்புகள் இருப்பது கண்டறியப்பட்ட நிலையில் தமிழகம் முதலமைச்சர் அவர்கள் தீமை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை செயல்படுத்தியுள்ளார் என்று பேசினார்.





ஓமலூர் சிறப்பு நிலை பேரூராட்சியில், திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் ஓ.எம்.ரமேஷ் இன்று 68 தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைவர் செல்வராணி, துணைத்தலைவர் புஷ்பா, திமுக நகரச்செயலாளர் ரவிச்சந்திரன், தளபதி நற்பணி மன்ற தலைவர் கே. ஆர். மகேந்திரன், செயல் அலுவலர், சுகாதார ஆய்வாளர் மற்றும் கவுன்சிலர்கள் கலந்துகொண்டனர். தூய்மை பணியாளர்களுடன் அவர்களும் அமர்ந்து உணவருந்தினர்.



ஈரோடு மாவட்ட காவல் துறையில் சிறப்பாக பணியாற்றியமைக்காக கோபிசெட்டிபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஜெகதா அவர்களுக்கு ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா அவர்கள் நற்சான்று பத்திரம் வழங்கி பாராட்டினார்.



ஈரோடு நகர உட்கோட்டம், ஈரோடு தாலுக்கா காவல் நிலையம், ரங்கம்பாளையம் மேம்பாலம் அருகில் அழுகிய நிலையில் நிர்வாணமாக பெண் கொலை செய்யப்பட்டு கிடப்பதாக தனியார் தொலைக்காட்சியில் செய்தி வெளிவந்துள்ளது. காவல் நிலையத்திலிருந்து 1½கிமீதொலைவில்ரிங்ரோடைஒட்டியஒதுக்குபுறமானமுள்புதர்கள் உள்ள இடத்தில் நடந்த இச்சம்பவத்தில் இறந்த நபரின் அடையாளம் காணவும், குற்றவாளிகளை கண்டுபிடிக்கவும், ஈரோடு டவுன் காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளிகளை கண்டுபிடிக்க தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# கோவையில் முதன்முறையாக சின்மயா மிஷன் சார்பாக, பிரம்மாண்ட '108 சமஷ்டி ஸ்ரீ ஹனுமன் சாலிஸா ஹோமம்' கோவை வடவள்ளியில் வரும் 15ம் தேதி நடைபெற உள்ளது

## பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் விழா; ஒருங்கிணைப்பாளர்கள் தகவல்

சின்மயா இயக்கத்தின் 75வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் சின்மய அமிர்த மஹோத்ஸவ கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, கோவையில் முதன்முறையாக சின்மயா மிஷன் சார்பில் '108 சமஷ்டி ஸ்ரீ ஹனுமன் சாலிஸாஹோமம் என்ற உலகளாவிய கூட்டு பிரார்த்தனை நிகழ்வு நடைபெற உள்ளது. உடல் நலன், உள்ளத் தூய்மை மற்றும் உலக நன்மை ஆகிய உயரிய நோக்கங்களுடன் நடத்தப்படும் இந்த ஆன்மிக நிகழ்வு குறித்த பத்திரிகையாளர் சந்திப்பு கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் உள்ள சின்மயா வித்யாலயா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. அப்போது சின்மயா கார்டன் அறக்கட்டளையின் தலைவர், சுவாமினி சம்பிரதிஷ்டானந்தா செய்தியாளர்களிடம் கூறியதாவது

சின்மயா இயக்கத்தின் 75வது ஆண்டை சிறப்பிக்கும் வகையில், ஹனுமானை வழிபடும் இந்த கூட்டு ஹோமம் நடத்தப்படுகிறது. ஹனுமன் சாலிஸா எனும் சக்தி வாய்ந்த நூலில் உள்ள மந்திரங்களை உச்சரித்து அக்னி பகவானுக்கு சமர்ப்பிப்பதே இந்த ஹோமத்தின் முக்கிய அம்சமாகும். இந்த ஹோமத்தின் சிறப்பு என்னவென்றால் பங்கேற்பாளர்கள் தங்களது கைகளாலேயே ஹோமத்தில் யாகம் செய்வதாகும், காலை 5 மணி முதல் நடைபெறும் இந்த நிகழ்வில், ஒவ்வொரு 45 நிமிடங்களுக்கும் 7 முறை ஹனுமன் சாலிஸா மந்திரங்கள் உச்சரிக்கப்படும். ஒரே நாளில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான முறை உச்சரிப்பதால் ஹனுமன் சூரிய பகவானின் சீடன் மற்றும் ஸ்ரீ ராமபிரானின் பக்தனான ஸ்ரீ ஹனுமனின் பேரருள் பெற முடியும். இந்த நிகழ்வில் 10,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது இந்த பிரம்மாண்ட ஆன்மிக நிகழ்வு சிவராத்திரி அன்று பிப்ரவரி 15 ஆம் தேதி காலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை, கோவை வடவள்ளியில் உள்ள மருதம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெறுகிறது.



பிரார்த்தனையில் பங்கேற்க எந்த கட்டணமும் அல்லது முன்பதிவும் தேவையில்லை. ஆனால் ஹோமத்தில் நேரடியாக பங்கு பெற விரும்புபவர்களுக்கு மட்டும் முன்பதிவு அவசியமாகும். மொத்தம் 108 ஹோம குண்டங்களில், 600 முதல் 650 பேர் வரை மட்டுமே பங்கேற்க அனுமதி வழங்கப்படும். தனிநபராகவோ அல்லது குழுவாகவோ ஹோமத்தில் பங்கு பெறலாம் என்றார்.

இந்த பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் சின்மயா கமிட்டி உறுப்பினர் வெங்கட கிருஷ்ணன், சின்மயா கார்டன் அறக்கட்டளை செயலாளர் ராமகிருஷ்ணன், சின்மயா மிஷன் ஆச்சார்யா கிருஷ்ண சைதன்யா, சின்மயாகார்டன்டிரஸ்ட் தலைவி சங்கீதாவாரியர், அறங்காவலர் வேணுகோபால், பொருளாளர் முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறிவழிகாட்டும் மையத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் வெள்ளிக்கிழமை அன்று தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

## கலெக்டர் கந்தசாமி தகவல்

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-

ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்தொழில் நெறிவழிகாட்டும் மையத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் வெள்ளிக்கிழமை அன்று தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு தனியார்துறை வேலை அளிப்பவர்கள் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவையான எழுதப்படிக்க தெரிந்த நபர்கள் முதல் பட்டப்படிப்பு படித்த நபர்கள் வரை மற்றும் செவிலியர்கள், டெய்லர்கள், கணினி இயக்குபவர்கள், தட்டச்சர்கள், ஓட்டுநர்கள் போன்ற பணிகளுக்கு தகுதியுள்ள நபர்களை தேர்வு செய்து தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டு வருகின்றனர். இதன் மூலம் மாதந்தோறும் 100 க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும், திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களும் கலந்து கொண்டு திறன் பயிற்சிக்கு தேவையான நபர்களை தேர்வு செய்து பயிற்சி அளித்து வருகின்றனர். அதன் படி இம்மாதம் 13.02.2026 வெள்ளிக்கிழமைஅன்று தனியார்துறை வேலைவாய்ப்புமுகாம் காலை 10.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறவுள்ளது.

வேலைநாடுர்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வாயிலாக நடத்தப்படும் இவ்வேலைவாய்ப்புமுகாம், வேலைஅளிப்பவர்களுக்கு முற்றிலும் இலவசமாக செயல்படுத்தப்படுகிறது. எனவே, ஈரோடு மாவட்டத்தில் தனியார்துறையில்பணிபுரிய ஆர்வமாக உள்ள அனைவரும் இந்தவேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறும், இம்முகாமின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார்துறையில் வேலைநாடுநர்களின் பணியமர்த்தம் வேலைவாய்ப்பு செய்யப்படும்



அலுவலக பதிவுஎண் இரத்து செய்யப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் விவரங்களுக்கு ஈரோடு தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரிலோ அல்லது தொலைபேசி எண் 8675412356, 9499055942 மின்னஞ்சல் : erode-megajobfair@gmail.com w decgc_erode மற்றும் Instagram Page வாயிலாகவும் தொடர்புகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மேலாண்மைத் துறை சார்பில் எம்போரியா 2026

ஈரோடு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மேலாண்மைத் துறை சார்பாக மாணவர்களின் தனித்திறன்களை வெளிப்படுத்தும் விதமாக மூன்று நாட்கள் கொண்ட கண்காட்சி "எம்போரியா 2026" என்கிற தலைப்பில் நடைபெற்றன.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். மேலும் மாணவர்களின் தனித்திறன்களை வெளிப்படுத்தும் விதமாக அமைக்கப்பட்ட அரங்குகளை தலைவர் வி.சண்முகன் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.

பின்னர், நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர்சு.மனோகரன் மற்றும் நிர்வாக அலுவலர் முனைவர். வி. சி. சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 100-க்கும் மேற்பட்ட விளையாட்டு அரங்குகள் மற்றும் 20-க்கும் மேற்பட்ட வர்த்தகஅரங்குகளை ஈரோடு சுற்று வட்டார கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள், நந்தா உறுப்பு கல்லூரிகளின் அனைத்து துறையினை சார்ந்த மாணவர்கள் சுமார் 7500-க்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் பார்வையிட்டு சென்றார்கள். அப்போது நடத்தப்பட்ட அறிவுத்திறன் சார்ந்த வேடிக்கை விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். நிறைவாக மேலாண்மைத்துறைத் தலைவர் முனைவர். ப. மோகன்ராஜ் நன்றியுரை வழங்கினார்.



இந்நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், மற்றும் நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ் திருமூர்த்தி ஆகியோர் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தார்கள்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு, காந்திஜிசாலை, அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில், தேசிய குடற்புழு நீக்க தினத்தினை முன்னிட்டு, பள்ளி மாணவியர்களுக்கு அல்பெண்டாசோல் மாத்திரையினை வழங்கினார்.

# நிர்வாக காரணங்களுக்காக கூட்டுறவு வங்கி காலி பணியிடங்கள் குறைப்பு: மாநில ஆள் சேர்ப்பு நிலையம் தகவல்



நிர்வாக காரணங்களுக்காக கூட்டுறவு வங்கி காலிப்பணியிடங்கள் குறைக்கப்படுவதாக மாநில ஆள்சேர்ப்பு நிலையம் தகவல் தெரிவித்துள்ளது. தமிழக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் இயங்கும் தலைமை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளில் காலியாக உள்ள உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கான முக்கிய அறிவிப்பை மாநில ஆள்சேர்ப்பு நிலையம் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே, வெளியிடப்பட்ட அறிவிப்பில் மொத்தம் 327பணியிடங்கள்நிரப்பப்படஇருந்தன.இந்நிலையில், நிர்வாகக் காரணங்களுக்காக தற்போது இந்தப் பணியிடங்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தின் விளைவாக, மாநில ஆள்சேர்ப்பு நிலையம் மூலம் நிரப்பப்பட வேண்டிய மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 327-லிருந்து 267 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.





ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் ஈரோடு, காந்திஜி சாலை, அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் சார்பில், தேசிய குடற்புழு நீக்க தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு உறுதிமொழியினை ஆசிரியர்கள், பள்ளி மாணவியர்கள் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.





ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தேசிய தகவலியல் மையத்தின் சார்பில் இணைய பாதுகாப்பு தினம் 2026யமுன்னிட்டு,நேற்று(10.02.2026)மாவட்டஆட்சியர்அலுவலககூட்டரங்கில்நவீனதொழில்நுட்பம்,பாதுகாப்பான தெரிவுகள், பொறுப்புடன் கூடிய பாதுகாப்பான செயற்கை நுண்ணறிவு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியினை துவக்கி வைத்து, பேசினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (சைபர் குற்றப்பிரிவு) வேலுமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, மாவட்ட தகவலியல் அலுவலர் (தேசிய தகவலியல் மையம்) ஜெகன் உட்பட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் உள்ளனர்.

# ஈரோட்டில் நடைபாதை மற்றும் சிறு வணிகர்களுக்கு நலவாரிய முகாம் நடத்தக்கோரிக்கை

## ஆட்சியரிடம் ஜோசப் தலைமையில் வணிகர் சங்கத்தினர் மனு



ஈரோடு மாவட்டத்தில் உள்ள நடைபாதை, தள்ளுவண்டி,தினசரிசந்தை மற்றும் வாரச்சந்தை வியாபாரிகளுக்கு அமைப்புசாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நடத்த வலியுறுத்தி தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை சார்பில் மாவட்ட ஆட்சியரிடம்மனுஅளிக்கப்பட்டது. முன்னதாக மாவட்டத் தலைவர் ஜோசப் தலைமையிலான நிர்வாகிகள் தொழிலாளர் உதவி ஆணையரை (சமூக பாதுகாப்புத் திட்டம்) சந்தித்து கோரிக்கை மனுவை வழங்கினர். அப்போது ஈரோடு மாவட்டத்தில் பேரவையில் பதிவுபெற்ற லட்சக்கணக்கான வியாபாரிகள் உள்ள நிலையில் அவர்கள் நலவாரியத்தில் சேருவதற்கு வெளி இடங்களில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாகக் குறிப்பிட்டனர். இதற்குப் பதிலளித்த அதிகாரி இக்கோரிக்கை குறித்து மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்து அவரது வழிகாட்டுதலைப் பெற்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியரை சந்தித்த தலைவர் ஜோசப் தலைமையிலான குழுவினர்வியாபாரிகள் மற்றும் அவர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் அரசின் சலுகைகளைப் பெறும் வகையில் சிறப்பு முகாம்களை நடத்த வேண்டும் என மனு அளித்தனர். இக்கோரிக்கை நிறைவேற்ற ப்பட்டால் ஆயிரக்கணக்கான வணிகக் குடும்பங்கள் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வின் போது மாவட்டச் செயலாளர் நித்தியகுமார், மாவட்ட தலைமை நிர்வாகச் செயலாளர் சுகன்யா, மாவட்டத் துணைத் தலைவர் பூங்கொடி மணி, நடைபாதை வியாபாரிகள் சங்கப் பொறுப்பாளர் சர்தார் பாய் மற்றும்உறுப்பினர்மும்தாஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கு இணங்க இந்து சமய அறநிலையத் துறை சார்பாக ஈரோடு ஈஸ்வரன் கோயில் மற்றும் சோளீஸ்வரன் கோயிலில் 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த தம்பதியருக்கு திருக்கோயில் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி கலந்து கொண்டு மூத்த குடிமக்களுக்கு சிறப்பு செய்தார் இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே. செல்வராஜ் மற்றும் இந்து அறநிலையத்துறை அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# Hindu trader stabbed to death in Bangladesh, three days before polls

*A Hindu businessman was killed in Bangladesh's Mymensingh on Monday, a couple of days before the country votes to elect their Prime Minister. Bangladesh will hold its general elections on February 12.*



*The victim, identified as 62-year-old Susen Chandra Sarkar, was a rice trader. Sarkar was hacked to death inside his shop, following which the perpetrators closed the shutters and fled, bdnews 24 cited Trishal Police Station chief (OC) Muhammad Firoz Hossain as saying.*

*The incident took place at 11 pm in Mymensingh's Trishal. Sarkar's shop, called the "Bhai Bhai Enterprise" is located at the Bogar Bazar intersection in the Upazila, while the victim was a resident of Southkanda village.*

*According to OC Firoz, unidentified assailants attacked Sarkar with a sharp weapon and then left him inside the shop, pulling down the shutters. The victim's family, while searching for him, opened the shutters of the shop and found him covered in blood, bdnews 24 cited Firoz as saying.*

*The victim's family members then rushed him to Mymensingh Medical College Hospital, where he was declared dead. Sarkar's body will be sent for postmortem examination, and legal action has been initiated, OC Firoz said. The police station chief said he had visited the crime scene after the incident.*

*The victim's son, Sujan Sarkar, said the assailants had stolen money from the shop, while adding that his father had no enmity with anyone. "We have had a rice business for a long time. No one had any enmity with us. The criminals stole several hundred thousand taka from the store after they brutally killed my father," Sujan told bdnews 24.*

*This comes amid a spate of attacks on minorities in Bangladesh, including the killing of Dipu Chandra Das in Mymensingh by a mob in December last year. Das, a garment factory worker, was beaten and set on fire by a mob in Bhaluka over alleged blasphemy.*

*In another incident, 38-year-old Rana Pratap Bairagi, a Hindu businessman who also served as the acting editor of a newspaper, was shot by unidentified assailants in Jessore district in January.*

*Within 24 hours of Bairagi's death, another Hindu man, a grocery shop owner, was reportedly killed after being attacked with sharp weapons in Narsingdi, on the outskirts of Bangladesh's Dhaka. India had, following these incidents, urged Bangladesh to "swiftly and firmly" deal with attacks on minorities. "Such communal incidents need to be dealt with swiftly and firmly. We have observed a troubling tendency to attribute such incidents to personal rivalries, political differences or extraneous reasons," external affairs ministry spokesperson Randhir Jaiswal had said.*

# ஏ.ஐ. மாநாட்டை முன்னிட்டு டெல்லியில் நட்சத்திர ஓட்டல் அறை வாடகை ரூ.30 லட்சம் வரை அதிரடி உயர்வு

*டெல்லி : ஏ.ஐ. மாநாட்டை முன்னிட்டு டெல்லியில் நட்சத்திர ஓட்டல் அறை வாடகை ரூ.30 லட்சம் வரை அதிரடியாக உயர்ந்துள்ளது. "செயற்கை நுண்ணறிவின் தாக்கம்" என்ற தலைப்பில் ஏஐ மாநாடு டெல்லியில் பிப்ரவரி 19, 20 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. சர்வதேச அளவில் கோலோச்சும் நிறுவனங்களின் தலைவர்கள் பங்கேற்பதால் மாநாடு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.ஏ.ஐ.மாநாட்டில் மெட்டா அலெக்சாண்டர் வாங்க், கூகுள் சுந்தர் பிச்சை, டெமிஸ் ஹசாபிஸ் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். ஏஐ மாநாட்டில் உலகம் முழுவதும் இருந்து பிரபல ஐடி நிறுவனங்களில் இருந்து 30,000 பேர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.*




*புகழ்பெற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் வரும் நிலையில் நட்சத்திர ஓட்டலின் ஒரு நாள் அறை வாடகை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. நட்சத்திர ஓட்டல்களில் சுமார் 20,000 அறைகள் மட்டுமே இருப்பதால் வாடகை பல மடங்கு உயர்ந்துள்ளது. ஏஐ மாநாடு நடைபெறும் பாரத மண்டபத்தின் அருகில் உள்ள தி ஒபராய் நட்சத்திர ஓட்டலில் ஒரு இரவு தங்க ரூ.29.50 லட்சம்நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநாடு நடைபெறும்இடத்தில்இருந்து 4.5 கி.மீயில் உள்ள தாஜ் மகால் ஓட்டலில் ஓர் இரவு வாடகை ரூ.22.5 லட்சமாகவும் தெற்கு டெல்லியில் உள்ள லீலா நட்சத்திர ஓட்டலில் அறை வாடகை ரூ.14.5 லட்சமாகவும் வசூலிக்கப்பட உள்ளது. நட்சத்திர ஓட்டல்களில் சாதாரண அறை வாடகை ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.5.6 லட்சமாக உயர்ந்துள்ளது.*

# பறவைக் காய்ச்சல்: ஆஃப் பாயில் சாப்பிட வேண்டாம் என எச்சரிக்கை!

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா. சுப்பிரமணியனிடன் பறவைக் காய்ச்சல் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது அமைச்சர் பேசியதாவது:



"பறவைக் காய்ச்சல் தொடர்பாக அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய சுகாதாரத்துறை எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பியிருந்தது. அந்த தகவல் கிடைத்ததும் காகங்கள் உள்ளிட்ட பறவை இனங்கள் திடீரென்று இறந்தால், அதனை பார்ப்பவர்கள் உடனடியாக ஆழமாக குழித் தோண்டி புதைக்க வேண்டும் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது. லேலும், திடீரென்று உயிரிழக்கும் கோழிகளை சாப்பிட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோழி இறைச்சி சாப்பிடுபவர்கள் நன்றாக சமைத்துசாப்பிடவேண்டும்.ஆஃப்பாயில்போன்றவற்றை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

மனிதர்களுக்கு பறவைக் காய்ச்சல் நோய்த் தொற்று இதுவரை ஏற்படவில்லை. மாவட்ட அளவில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படு கிறது" எனத் தெரிவித்தார்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.